ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2124/41 - 2019 මැයි මස 24 වැනි සිකුරාදා - 2019.05.24
*2124/41 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

இணைப்பு - 01

**ஊவா மாகாண மாகாண சபை**

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபை சட்டத்தின் 32(1) ஆம் பிரிவின் கீழ் ஊவா மாகாண ஆளுநர் சனாதிபதி சட்டத்தரணி மார்ஷல் பெரோ ஆகிய எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்களை செய்துள்ளேன் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

01. இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எம். பீ. ஆர். எம். எஸ். ஜீ. பீ. ரத்னாயக அவர்கள், உடனடியாக செயற்படும் வகையில் (2019.01.24 ஆந் திகதி முதல்) ஊவா மாகாண கால்நடை வளர்ப்பு மற்றும் சுகாதார திணைக்களத்தின் பதுளை பிரதி மாகாண பணிப்பாளராக.

02. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டப்ளிவ். எம். எம். ஜீ. அபேசிங்க பண்டா அவர்கள், உடனடியாக செயற்படும் வகையில் (2019.02.13 ஆந் திகதி முதல்) ஊவா மகாண பிரதித் தலைமைச் செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி)

03. இலங்கை நிர்வாக சேவையின் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஜீ. டப்ளிவ். சீ. எஸ். பிரியபாஷினி அவர்கள், 2019.02.18 ஆந் திகதி முதல் தனது நிரந்தரப் பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக பதுளை மாநகர சபையின் மாநகர சபை ஆணையாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

1A - PG 4530 — 32 (2019/05)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

04. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க அவர்கள், உடனடியாக செயற்படும் வகையில் (2019.02.26 ஆந் திகதி முதல்) தனது நிரந்தரப் பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக ஊவா மாகாண சபையின் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், சுற்றுலாத்துறை, போக்குவர்த்து, கலாசாரம் மற்றும் நெசவுக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் தொடர்பான அமைச்சின் செயலாளராக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது ஓய்வுபெறும் திகதி வரை அப்பதவியில் பதில் கடமையாற்ற.

05. இலங்கை கமத்தொழில் சேவையின் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எச். கே. பீ. ஜயலத் அவர்கள், உடனடியாக செயற்படும் வகையில் (2019.05.08 ஆந் திகதி முதல்) ஊவா மாகாண கமத்தொழில் திணைக்களத்தின் ஊவா மாகாண பிரதி கமத்தொழில் பணிப்பாளராக.

சனாதிபதி சட்டத்தரணி மார்ஷல் பெரோ,
ஊவா மாகாண ஆளுநர்.

ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்,
பதுளை,
2019, மே 21.

06 - 171

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.